தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 16, பவ—திருவள்ளுவர் ஆண்டு 2026

1995, மார்ச் 30, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“ பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி.”

பயனைத் தரும் ஊழ்வினை இல்லாது இருத்தல் யார்க்கும் பழியன்று. ஆனால் அறிய வேண்டியவற்றை அறிந்து, ஆள்வினையோடு முயன்று வினை செய்யாது இருத்தலே பெரும் பழியாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 161, திரு. கே. தவசி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

161—

கோவில்பட்டி வட்டத்தில் குளம் அமைத்தல்

***35580**—திரு. கே. தவசி:*

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம், கோவில்பட்டி வட்டத்தில் குளம் அமைக்க பொதுப்பணித்துறைக்கு நிலமாற்றம் செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிலக்கிரயம் பெற்றுக்கொண்டு நிலமாற்றங்கள் செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

53-38-4

(அ) ஆம்.

(ஆ) தற்போதுள்ள நடைமுறையின்படி அரசுத் துறையினுடைய நிலங்களை அரசினுடைய மற்ற துறைகளுக்கு கொடுக்கிறபொழுது, அந்தத் துறை வணிக நோக்குடன் இல்லாமல், மக்களுக்குப் பயன்படுகிறபொழுது அவர்களுக்கு எல்லாம் பணம் வாங்காமல் கொடுக்கப்படுகிறது.

திரு. கே. தவசி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி வட்டத்தில் குளம் அமைக்க பொதுப் பணித் துறைக்கு நிலம் மாற்றம் கொடுக்கப்பட்டதாக அறிவித்திருக்கிறார். அதேபோல தமிழகத்தில் உள்ள மற்ற பகுதிகளில் இதே மாதிரி மற்ற துறைகளுக்கு நிலம் மாற்றம் செய்து தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் கோவில்பட்டி வட்டத்தில் சரவணபுரம் என்ற கிராமத்தில் உள்ள சிறு பாசன திட்டங்களுக்காக கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல வேறு இடங்களிலும் அதே கோயில்பட்டி வட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தத் துறைக்கு கொடுக்கிறோமோ, எந்தக் காரணங்களுக்காக கொடுக்கப்படுகிறதோ, அந்த காரணத்திற்காகத்தான் அந்தத் துறை பயன்படுத்தப்பட வேண்டும். அந்தக் காரணங்களுக்காக பயன்படுத்தாவிட்டால், அரசு திருப்பி எடுத்துக் கொள்ளும். அரசு துறை என்பதனாலேயே ஒரு துறை வேறு ஒரு துறைக்கு அந்தத் துறையினுடைய இஷ்டப்படி மாற்ற முடியாது. அதேபோல தமிழ்நாடு பூராவும் எங்கு வேண்டுமானாலும், எந்தத் துறை நிலம் கேட்டாலும், அப்படி கேட்டதன் தன்மைக்கு ஏற்றவாறு அரசு நிலங்களைக் கொடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி. ரெ. சியாமளா.

திருமதி ரெ. சியாமளா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்பட்டி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கோவில்பட்டி குடிநீர் பிரச்சினையைத் தீர்த்து வைத்து 1 கோடியே 32 லட்சம் அனுமதி அளித்து அரசு ஆணை பிறப்பித்த எங்களது இதய தெய்வம், சமூக நீதி காத்த வீராங்கனை அவர்களின் பொற்பாதம் தொட்டு, எனது தொகுதி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியை புரட்சி தலைவி அவர்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்கிக் கொண்டு, மேற்படி அமைச்சர் அவர்கள் சிதம்பராபுரம் கண்மாய் அமைக்க அரசு நிலம்

கொடுத்து இருப்பதாக கூறியுள்ளார்கள். அந்த ஏற்பாடானது அந்தப் பகுதி மக்களுக்கு மிகுந்த பயனை அளிக்கும். எனவே இது சம்பந்தமாக அரசு விரைவில் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் கோவில்பட்டி வட்டம், கோவில்பட்டி - எட்டயாபுரம் சாலையில் அமைந்துள்ள குறிஞ்சாகுளம் கண்மாயை அரசு எடுத்துக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா எனவும், பல அரசு அலுவலகங்கள் கட்ட அரசு அனுமதி அளித்தும் இடம் இல்லாத காரணத்தால் அந்த அரசு அலுவலகங்கள் கட்டப்படாமல் உள்ளன; எனவே, மேற்படி கண்மாயை அரசு எடுத்துக்கொண்டு அங்கே பல அரசு அலுவலகங்களைக் கட்ட அரசு ஆணை பிறப்பிக்கப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரிடத்திலே அது பற்றிய விவரமான குறிப்பு இருக்காது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிலம் கொடுப்பது ஏரிகளை வெட்டுவதற்காகவும், குளங்களை வெட்டுவதற்காகவும்தான். குளங்கள் வெட்டுவதற்காக எங்கெங்கே நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சொல்லலாம். ஆனால் ஏரிகளையும் குளங்களையும் தூர்த்து கட்டிடம் கட்டுவது என்பது அரசினுடைய கொள்கைக்கு விரோதமானது. அதை அரசு பின்பற்றாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 162, திரு. க. பழனிசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

162—

எடப்பாடி அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணரை நியமித்தல்

*34238—திரு. க. பழனிசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?